முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1568

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**14.01.2024,** ஞாயிற்றுக்கிழமை

1. தர்மராஜனே அரங்கா வாழ்க
தவபலம்கொண்ட தேசிகா வாழ்க
பேருலகை காக்கும் விதமாக
பிரணவக்குடில் படைத்து உலகமெல்லாம்
2. உலகமெல்லாம் உன் அவதார மகிமையை
உயர்வாக தர்மவழி கொண்டு செல்லும்
காலனை வென்ற அரங்கனே
கலியுகத்தின் ஞானியே உந்தனுக்கு
3. உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
உரைத்திடுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் மார்கழி மாதம் 29 ம் நாள், 14.01.2024, ஞாயிற்றுக்கிழமை)
சிந்தைபட அரங்கன் நாமஜெபம்
சித்திதரும் உலகோர்க்கு ஞானவழி
4. ஞானவழி அரங்கன் திருவடி பற்றி நம்பிக்கைக் கொண்டு வருபவர்க்கு
ஞாலமதில் ஞானியாகும் பெருவாய்ப்பு
ஆற்றல்பட ஆறுமுகன் என்னால்
அனைவருக்கும் இலகுவாக சித்திக்கும்
5. சித்திக்க தர்மவழி அரங்கன் தொடர்பு
சிந்தனைகள் அரங்கன் பேரில் எக்கணமும்
எக்கணமும் உலகோர்கள் பற்றுகொண்டு இனிதே அரங்கனை பின்தொடர்ந்தால்
ஆற்றல்பட ஆறுமுகன் அன்னவர்கட்கு அகிலமதில் ஒளிகாட்சி மூலமாக
6. மூலமாக தரிசனத்தை உருவாக்கி
முழுமைபட அவரவர்க்கும் அருள்புரிவேன்
காலனை வெல்லும் வாய்ப்போடு
கலியுகத்தில் ஞானியாக சிறக்க அரங்கன் வழியே

7. அரங்கன் வழியே உலகோர்க்கு கடைசி வாய்ப்பு
அன்னதனால் உலகோர் ஓங்காரக்குடில் நோக்கி அரங்கனை
பின்தொடர்ந்து சரணாகதி
நேசமுடன் கொண்டுவிட நிலவுலகில் நிகழ்த்திடுவேன்
ஞான ஆட்சிக்காலமாக மாற்றம் காணும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–